சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

பி.வா.சா. 4 நாள் : 28.03.2025

அசல் வழக்கு எண். 8/2024

பெயர் பாலசுப்ரமணியன்க/பெ பக்கிரிசாமி

வயது 58/2025 தொழில் விவசாயம்.

கிராமம் காழியப்பநல்லூர் காழியப்பநல்லூர் தாலூக்கா தரங்கம்பாடி

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை:**

நான் 2/149–P1, மெயின்ரோடு, காழியப்பநல்லூர், தரங்கம்பாடி தாலுக்கா என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியமளிக்க சம்மன் வந்தது அதனால் சாட்சியமளிக்க வந்துள்ளேன். சக்கரவர்த்தி குமாரர் ஜெயக்குமாரை தெரியுமா என்றால் தெரியும். ஜெயக்குமார் எனக்கு தாய் வழியில் ஒன்று விட்ட தம்பி. என் தாயாரும் இந்த வழக்கின் வாதியும் ஒன்று விட்ட சகோதரிகள். ஜெயக்குமாரை எனக்கு சிறு வயது முதலே தெரியும். என்னிடம் காட்டப்படும் பிவாசா 46 ஆவணமான உயிலில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. ஜெயக்குமார் அந்த உயிலில் என் முன்பாகத்தான் கையெழுத்து போட்டார். என்னுடன் வெங்கட் என்பவரும் உடனிருந்தார். அவர் இரண்டாவது சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். நான் சாட்சி கையெழுத்து போட்டதை ஜெயக்குமார் பார்த்தாரா என்றால் பார்த்தார். அவர் நல்ல மனநிலையில் தான் உயில் எழுதும்போது இருந்தார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஜெயக்குமார் என் உறவினர் என்பதால் எனக்கு சிறு வயதிலிருந்தே அவரை தெரியும். நான் வசிக்கும் காழியப்பநல்லூர் மயிலாடுதுறையில் இருந்து சுமார் 27 கிமீ தூரத்தில் உள்ளது. ஜெயக்குமாரின் அப்பா பெயர்

[signature]

சக்கரவர்த்தி. சக்கரவர்த்தி எப்போது இறந்தார் என்று நினைவில்லை. நான் SSLC முடித்த பிறகு சென்னைக்கு போய்விட்டேன். அங்கு ஒரு பத்து வருடம் இருந்தேன். சவுதி அரேபியாவில் மூன்று வருடம் இருந்தேன். இந்தியாவிற்கு வந்தபிறகு சென்னையில் தங்கிவிட்டேனா என்றால் இல்லை. காழியப்பநல்லூர் வந்து விட்டேன். எத்தனை வயதில் என்றால் 30 வயதில். எப்போதிலிருந்து ஜெயக்குமார் நல்ல பழக்கம் என்றால் 2017 முதல் நல்ல பழக்கம். நான் 2017 ல் பட்டமங்கல தெருவில் ஹோட்டல் ஆரம்பித்தேன். அதற்கு அவர் தான் உதவி செய்தார். அது முதல் நல்ல பழக்கம். அந்த ஹோட்டலுக்கு ஜெயக்குமார் தான் அன்னபூர்ணா என்று பெயர் வைத்தார். வழக்கு போட்டிருப்பது யார் என்று தெரியுமா என்றால் பிரகாஷ், இந்திராணி, கோபால் ஆகியோர். பிரகாஷ், கோபால் வெளிநாடு போயிருந்தது தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் வெளிநாட்டில் இருந்து குடும்பத்திற்கு பணம் அனுப்பியது தெரியுமா என்றால் தெரியாது. ஜெயக்குமாருக்கு இறக்கும்போது சுமார் 50 வயதிருக்கும். இந்திராணி, கோபால் என்ற கோபாலக்கிருஷ்ணன், ஜெயக்குமார் ஆகியோர் கச்சேரிரோட்டில் இருந்தார்கள். பிரகாஷ் அந்த வீட்டில் இருந்தது தெரியுமா என்றால் தெரியாது. பிரகாஷ் தற்போது சீர்காழி டவுனில் உள்ளார் என்றால் சரி. 2017 க்கு பிறகு தான் பிரகாஷ் எனக்கு பழக்கம். சக்கரவர்த்தியின் மூத்தமகன் ஜெயக்குமார் என்றால் சரி. சக்கரவர்த்தி இறந்துபோன பிறகு சக்கரவர்த்தி நடத்தி வந்த வியாபாரத்தை ஜெயக்குமார் தான் செய்தார் என்றால் சரி. அந்த வீட்டில் எத்தனை கடைகள் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்திராணியும் கோபாலக்கிருஷ்ணனும் ஒரே வீட்டில் இருந்தார்களா என்றால் ஆமாம். ஜெயக்குமார் குடும்ப சொத்தின் வருமானத்தை வைத்து தான்

சொத்துக்களை பெருக்கினார் என்றாலும், அவருக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்றால் சரியல்ல. அவர் சைக்கிள் வாடகைக்கு விடும் கடை வைத்திருந்தார், டிரைவராக இருந்தார், கேரளாவிற்கு மீன் லோடு ஏற்றி போவார். அதற்காக சொந்தமாக 407 வண்டி வாங்கினார். வீட்டிற்கு கீழே உள்ள 13 கடைகளின் வாடகையை ஜெயக்குமார் தான் வாங்கி கொண்டார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சக்கரவர்த்திக்கு எவ்வளவு பூர்வீக சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. பிவாசா 46 ஆவணமான உயிலை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பிரகாஷ் ஏன் சீர்காழியில் தனியாக உள்ளார் என்றால் தெரியாது. ஜெயக்குமார் என்னிடம் பிரகாஷ் பணம் வாங்கி கொண்டு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்து விட்டு தனியாக போய்விட்டதாக சொல்லியிருக்கிறார். ஜெயக்குமாருக்கு சொந்த தொழில் எதுவும் கிடையாது என்றாலும் அவர் குடும்ப சொத்திலிருந்து கிடைத்த வருமானத்திலிருந்துதான் சொத்துக்களை வாங்கினார் என்றால் சரியல்ல. பொது சொத்தில் இருந்து அவருக்கு எவ்வளவு வருமானம் வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. ஜெயக்குமாருக்கு பொது சொத்திலிருந்து வந்த வருமானத்திலிருந்து வாங்கிய சொத்துக்களை தவிர தனிப்பட்ட வருமானத்திலிருந்து வாங்கிய சொத்துக்கள் எதுவும் அவருக்கு கிடையாது என்றால் சரியல்ல. அவர் தன்னுடைய தனிப்பட்ட வருமானத்தை வைத்து தான் கட்டிடங்கள் கட்டியதாக சொல்லியிருக்கிறார். ஜெயக்குமார் கட்டிடங்களை தான்தான் கட்டியதாக சொன்னார். ஸ்டேட் பேங்கில் 4 லட்சம் ரூபாய் அண்ணன் தம்பிகள் சேர்ந்து கடன் வாங்கியுள்ளார்கள் என்றால் தெரியாது. அது அடைக்கப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரி.

பிவாசா 46 ஆவணத்தில் சொத்து விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி பார்த்து விட்டு இல்லை என்று கூறுகிறார். ஜெயக்குமார் பெயரிலும் அவர் மனைவி பெயரிலும் தனிப்பட்ட சொத்து உள்ளதா என்றால் தெரியாது. உயில் எழுதுவதற்கு ஜெயக்குமாருக்கு உரிமை இல்லை என்றாலும், அவை குடும்ப பொது சொத்துக்கள் என்றால் சரியல்ல. அந்த இடத்தையும் பில்டிங்கையும் உருவாக்கியதே தான் என்று ஜெயக்குமார் சொல்லியிருக்கிறார். ஜெயக்குமார் திடீரென்று இறந்து விட்டாரா என்றால் இல்லை. விஷம் குடித்து இறந்துவிட்டார். வாதி இந்திராணி ஜெயக்குமாரின் இறப்பு பற்றி போலிஸ் புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அதில் உயிலின் இரண்டாவது சாட்சி வெங்கட்ராஜலு எதிரியாக உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயக்குமாரின் மனைவியை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். ஜெயக்குமாரின் மாமனார், மாமியார் எங்கு இருக்கிறார்கள் என்றால் காப்பனாமங்கலத்தில் உள்ளார்கள் ஆனால் நான் அங்கு போனதில்லை. உயிலை யார் எழுதினார்கள் என்றால் டைப் அடித்த உயிலைத்தான் நான் பார்த்தேன். அதை யார், எங்கு டைப் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு உயிலில் சாட்சி கையெழுத்துபோட வரும்படி யார் கூப்பிட்டது என்றால் ஜெயக்குமார் வீட்டிற்கு வாங்க ஒரு செய்தி இருக்கிறது என்று போனில் சொன்னார். நான் ஜெயக்குமார் வீட்டிற்கு போனபோது அங்கு யார் இருந்தார்கள் என்றால் ஜெயக்குமாரும், வெங்கட்ராஜலு ஆகியோர் இருந்தார்கள். அப்போது மதியம் 3, 3.15 இருக்கும். ஜெயக்குமார் என்னிடம் என்ன சொன்னார் என்றால் டைப் அடித்திருந்த உயிலை படித்து பார்க்க சொன்னார். படித்து பார்த்தேன். நான் கையெழுத்து போடுகிறேன். சாட்சி கையெழுத்து நீங்கள் தான் போடவேண்டுமென்று

சொன்னார் நான் போடுகிறேன் என்று சொன்னேன். முதலில் உயிலில் ஜெயக்குமார் கையெழுத்து போட்டார் அதன்பிறகு நான் சாட்சி கையெழுத்து போட்டேன் எனக்கு பிறகு வெங்கட்ராஜலு சாட்சி கையெழுத்து போட்டார். எனக்கு ஜெயக்குமார் போன் செய்தபோது நான் மாயவரத்தில் எனது ஹோட்டலில் இருந்தேன். வெங்கட்ராஜலு எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் மறந்து விட்டேன். அவரையும் 2017 க்கு பிறகு தான் தெரியும். என்னுடைய அன்னபூர்ணா ஹோட்டலை கொரோணா காலத்தில் மூடிவிட்டேன். உயிலில் சிறையில் இருந்ததை பற்றி எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. யார் சிறையில் இருந்தது என்றால் ஜெயக்குமார் இருந்தார் அதைப்பற்றி உயிலில் எழுதியுள்ளார். ஜெயக்குமாரின் தம்பிகள் இரண்டு பேர் மயிலாடுதுறை ஜெயிலில் இருந்தார்கள். அதைப்பற்றியும் உயிலில் எழுதியிருக்கிறார். ஜெயக்குமார் தான் வாழக்கையில் அடிபட்ட விவரத்தை எழுதியிருக்கிறார். ஜெயக்குமார், நான், வெங்கட்ராஜலு ஆகியோர் நண்பர்களா என்றால் ஜெயக்குமார் என் உறவினர். வெங்கட்ராஜலு என் நண்பர். இந்திராணி வழக்கு போட்டு கேஸ் நிலுவையில் உள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உயில் எந்த வருடம் எழுதப்பட்டது என்றால் 2019 ல் எழுதப்பட்டது. அந்த உயில் முதன்முதலில் எந்த கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. உயிலில் ஜெயக்குமார் என் முன்பாக கையெழுத்து போடவில்லை என்றாலும், உயில் தயாரித்து பின்னிட்டு என்னிடம் சாட்சி கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. ஜெயக்குமார் என்பவர் என் முன்னிலையில் உயிலில் கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல என் முன்பாகத்தான் கையெழுத்து போட்டார். நானும் வெங்கட்ராஜலுவும் ஜெயக்குமாருக்கு வேண்டியவர்கள் என்பதால் ஜெயக்குமார் உயில் எழுதி வைத்துள்ளார் என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி ... அளிக்கப்பட்டு அதனை ... எடுத்துச் சொல்லப்பட்டு ... என் ஆணையின் ... எதிர்மறை ... காணப்பட்டு ... ஒப்புக்கொள்ளப்பட்டது

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

28/3/25

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

பி.வா.சா. 5 நாள் : 28.03.2025

அசல் வழக்கு எண். 8/2024

பெயர் வெங்கட்ராஜலு க/பெ ராஜேந்திரன்

வயது 43/2025 தொழில் எலக்ட்ரானிக்

கிராமம் கழக்காணிமுட்டம் தாலூக்கா மயிலாடுதுறை

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை:**

நான் 12/2, வ.உ.சி. தெரு, கழக்காணிமுட்டம், மயிலாடுதுறை தாலுக்கா என்ற முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியமளிக்க சம்மன் வந்தது அதனால் சாட்சியமளிக்க வந்துள்ளேன். எனக்கு ஜெயக்குமாரை தெரியும். பிவாசா 46 ஆவணமான உயிலில் நான் இரண்டாவது சாட்சி கையெழுத்து போட்டிருக்கிறேன். அது ஜெயக்குமார் எழுதி வைத்த உயில். அதில் அவர் கையெழுத்து போட்டதை நான் பார்த்தேன். என் முன்பாகத்தான் கையெழுத்து போட்டார். பாலசுப்ரமணியனும் அப்போது அவர் முதல் சாட்சி கையெழுத்து போட்டார். முதலில் ஜெயக்குமார் கையெழுத்து போட்டார். அதன்பிறகு பாலசுப்ரமணியனும், அதன்பிறகு நானும் சாட்சி கையெழுத்து போட்டோம். ஜெயக்குமார் கையெழுத்து போட்டதை நாங்களும் நாங்கள் சாட்சி கையெழுத்து போட்டதை அவரும் பார்த்தார். அந்த காலகட்டத்தில் அவர் நல்ல மனநிலையில் இருந்தாரா என்றால் இருந்தார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு ஜெயக்குமாரை 2010 முதல் பழக்கம். அவர் என் குடும்ப நண்பர். அவர் 2020 ல் இறந்தார். அவர் அப்பா சக்கரவர்த்தியை தெரியுமா என்றால் நேரடி பழக்கம் இல்லை கேள்விப்பட்டுள்ளேன். சக்கரவர்த்திக்கு

R. venkataraju

எவ்வளவு சொத்திருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. பிவாசா 46 ஆவணத்தை கையால் எழுதினார்களா என்றால் இல்லை ஜெயக்குமார் தான் டைப் அடித்த உயிலை எடுத்து வந்தார். நான் ஜெயக்குமார் வீட்டிற்கு போனபோது மதியம் சுமார் 2. 30 , 2.45 மணியிருக்கும். உயில் பத்திரம் எங்கு டைப் அடிக்கப்பட்டது என்று போட்டுள்ளதா என்றால் இல்லை. நான் அந்த உயிலை படித்து பார்த்தேன். அதில் சொத்துவிவரம் உள்ளதா என்றால் இல்லை. உயில் எந்த வருடம் எழுதப்பட்டது என்றால் 2019 ல் எழுதப்பட்டது. அவர் எப்போது இறந்தார் என்றால் 2020 – 4ம் மாதம் இறந்தார். அவர் இறப்பதற்கு சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்பு உயில் எழுதப்பட்டது. உயிலில் கண்ட ஷரத்துக்களை எப்படி எழுதவேண்டும் என்று கேட்டு டைப் செய்து வந்தாரா என்றால் அதைப்பற்றி நான் கேட்கவில்லை. ஜெயக்குமார் அந்த உயில் மூலம் யாருக்கு சொத்து கொடுப்பதாக சொல்லியுள்ளாரா என்றால் தனது மனைவி ராஜராஜேஸ்வரி மகள்கள் ஜெயலட்சுமி, ராஜலட்சுமி ஆகியோருக்கு கொடுப்பதாக எழுதியுள்ளார். சக்கரவர்த்தி இறந்தது சொல்லிக்கேள்வி நேரடியாகத் தெரியாது. சக்கரவர்த்தி இறந்தபிறகு குடும்ப சொத்துக்கள் முழுவதையும் ஜெயக்குமார் தான் நிர்வாகம் செய்தார் என்றால் சரி. ஜெயக்குமார் இறந்த பிறகு வாதி இந்திராணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் ஆன்லைன் புகார் கொடுத்தார். அதில் எதிரியாக என் பெயர் காட்டப்பட்டுள்ளது என்றால் சரி. அவர் தனது மகன் மரணத்தில் மர்மம் உள்ளது என்று புகார் கொடுத்தார் என்றால் சரி. கோபால், பிரகாஷ் ஆகியோர் வெளிநாடு போய் சம்பாதித்தது தெரியுமா என்றால் தெரியும். ஸ்டேட் பேங்கில் எல்லாரும் சேர்ந்து 4 லட்சம் ரூபாய் கடன் வாங்கியது தெரியுமா என்றால் தெரியும். ஜெயக்குமார் கடன்

R. [signature]

வாங்கினார் மற்றவர்கள் Surety கையெழுத்து போட்டார்கள். அந்த கடனை ஜெயக்குமார் அடைத்து விட்டார். பிரகாஷ் சீர்காழியில் வீடு வாங்கி குடியிருக்கிறார் என்றால் சரி. உயிலில் கையெழுத்து போடும் போது நான் படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். அதில் குடும்ப பிரச்சனை சண்டை, ஆகியவை சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. இந்திராணி வழக்கு போட்டதையும் தகராறு செய்ததையும் சொல்லியிருக்கிறார். அந்த உயில் முதன்முதலில் எங்கு தாக்கல் செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. பூர்வீக சொத்து, 13 கடைகள் ஆகியவை அனைத்தையும் ஜெயக்குமார் தான் நிர்வாகம் செய்தார் என்றால் 13 கடைகள் கட்டியது ஜெயக்குமார் என்று அவர் சொன்னார். அந்த கடைகள் வாடகைக்கு விடப்படவில்லை. அந்த கடைகளில் பொருட்கள் வைத்து விற்கிறார்கள். பூர்வீக சொத்துக்களை சக்கரவர்த்தி காலத்தில் விற்றது தெரியுமா என்றால் தெரியாது. ஜெயக்குமார் என் நெருங்கி நண்பர் என்றாலும், அவருக்கு வேண்டிய உதவிகள் செய்வேன் என்றால் சரி. என்னிடம் ஜெயக்குமார் சொத்து பத்திரங்களை காட்டியுள்ளாரா என்றால் இல்லை. என் பெயரிலும் மற்றவர்கள் பெயரிலும் இரண்டு குற்ற வழக்குகள் இந்திராணி போட்டு அவை நிலுவையில் உள்ளது என்றால் மயிலாடுதுறை வழக்கு AD செய்து விட்டார்கள். CC. 72/2023 என்ற வழக்கை இந்திராணி கொடுக்கவில்லை. கோபாலக்கிருஷ்ணன் அல்லது அவர் மனைவி கொடுத்திருப்பார். CC 231/2020 என்ற வழக்கு என் பெயரில் நிலுவையில் உள்ளது என்றால் என் பெயரில் அதுபோல் எந்த வழக்கும் நிலுவையில் இல்லை. தீபாவளி அன்று நடந்த ஒரு சம்பவம் சம்பந்தமாக என் மீது குற்றஎண். 1231/2020 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது தீபாவளி அன்று நடந்த சம்பவத்திற்காக

R. Venkatraman

போடப்பட்ட வழக்கில்லை. ஆகஸ்ட் மாதம் நடந்த பிரச்சனைக்காக போலிசார் போட்டவழக்கு அது நிலுவையில் உள்ளது. உயிலில் ஜெயக்குமார் என் முன்பாக கையெழுத்து போடவில்லை என்றாலும், உயில் தயாரித்து நான் நண்பர் என்ற முறையில் பின்னிட்டு என்னிடம் சாட்சி கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. ஜெயக்குமார் என்பவர் என் முன்னிலையில் உயிலில் கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல என் முன்பாகத்தான் கையெழுத்து போட்டார். உயில் எங்கு டைப் அடிக்கப்பட்டது அதற்கான ஷரத்துக்களை யார் சொன்னார்கள் என்று ஜெயக்குமாரிடம் கேட்டேனா என்றால் இல்லை.

R. [signature]

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature] 28/3/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

28/3/25